வள்ளலாரின் கொள்கைகளை மாணவர்கள் பின்பற்ற வேண்டும்

நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன்

சென்னை, பிப். 3: வள்ளலார் பற்றி மாணவர்கள் படிப்பது, கட்டுரை எழுதுவதுடன் நின்றுவிடாமல் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன் கூறினார்.

இராமலிங்கர் இலக்கிய அறக்கட்டளை சார்பில், கட்டுரைப் போட்டி பரிசளிப்பு, வடலூர் ஞானசேகரன், டாக்டர் செ.சுமதி ஆகிய இருவருக்கு வள்ளலார் இலக்கிய விருது வழங்குதல், பின்னலூர் மு.விவேகானந்தனின் NINE DIVINE SOULS என்னும் நூல் வெளியீடு ஆகிய முப்பெரும் விழா சென்னை மயிலாப்பூர் பி.எஸ். மேல்நிலைப் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன் தலைமை வகித்தார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன், தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் வடலூர் ஞானசேகரன், டாக்டர் செ.சுமதி ஆகியோருக்கு வள்ளலார் இலக்கிய விருதை நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன் வழங்கினார். தொடர்ந்து, மு.விவேகானந்தனின் NINE DIVINE SOULS என்னும் நூலை தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன் வெளியிட தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன் பேசியது:

கடந்த 11 ஆண்டுகளாக இராமலிங்கர் இலக்கிய அறக்கட்டளை மிகப்பெரிய சமூகப் பணியை செய்து வருவது பாராட்டுக்குரியது. வாழ்க்கை என்பது ஒரு புள்ளியில் தொடங்குகிறது. அது பயணமாகி இன்னொரு புள்ளியில் போய் முடிகிறது. உங்களது வாழ்க்கை ஆன்மிகம் என்ற பயணத்தில் தொடங்கினால் எதுவுமே இல்லை என்ற அவநம்பிக்கையில் போய் முடியலாம். அவநம்பிக்கை என்னும் புள்ளியில் தொடங்கியவர்களுக்கு நம்பிக்கையில் போய் முடியலாம். பயணம் மிகவும் முக்கியம். சிலருக்கு ஒரு புள்ளியில் வாழ்க்கை தொடங்கி பயணமே இன்றி முடிந்து விடுகிறது. பயணமே இல்லாத வாழ்க்கையை விட தொடங்கிய புள்ளியில் இருந்து வேறுபுள்ளிக்குச் சென்று முடியும் வாழ்க்கை பயனுள்ள வாழ்க்கையாகும் என்பது நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

காலம்காலமாகநமது நாட்டில் படிப்பு என்பது வாழ்க்கை கல்வி முறையாக இருந்தது. பிழைப்புக்கான கல்வியாக இல்லை. ஆனால், இன்று படிப்பு என்பது சம்பாதிக்கும் கல்வியாக மாறி விட்டது.

வள்ளலார் குறித்து கட்டுரை எழுதும் போட்டியில் இந்த ஆண்டு அதிக மாணவர்கள் ஆர்வம் காட்டியது பாராட்டத்தக்கது. ஆனாலும், மாணவர்கள் வள்ளலார் பற்றி கட்டுரை எழுதினால் மட்டும் போதாது. அவரது கொள்கைகளை வாழ்க்கையில் பின்பற்றி நடக்க மாணவர்கள் முன்வர வேண்டும். வள்ளலார், காந்தி போன்றவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளை பற்றித் தெரிந்துகொண்டு அவர்களின் கொள்கைகளையும் போதனைகளையும் பின்பற்றி நடந்தால் நமது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும் என்றார்.

நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் பேசியது:

புற வாழ்க்கை எத்தகையதாக இருந்தாலும், அக வாழ்க்கை சிறப்பாக அமைவது தனிநபர் சார்ந்த விஷயம். அக வாழ்க்கை தூய்மையாக அமைந்துவிட்டால் நம்மை அடையாளம் கண்டுவிடலாம்.

இந்த 9 ஞானிகள் பற்றிய நூலில் வள்ளலார் குறித்த ஒரு அற்புதமான பதிவு இருக்கிறது. சாதிமத பேதங்களை விலக்கிப் பாருங்கள், உலகில் ஏற்ற, இறக்கங்களை நீக்கி பாருங்கள், பசிப் பிணி போக்கும் காரியங்களில் ஈடுபடுங்கள் இறை என்னும் ஒளியை அடைந்து விடலாம் என்று வள்ளலார் பதிவுசெய்துள்ளார். இறைஞானத்தை அடையும் வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை என்கிறார் வள்ளலார். அதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக தமிழியல் துறைத் தலைவர் சு.பாலசுப்பிரமணியன், வழக்குரைஞர் பின்னலூர் மு.விவேகானந்தன், வழக்குரைஞர்கள் பி.ஆர்.கணேசன், வே.சொக்கலிங்கம், பாலு பச்சையப்பன், தெய்வத்தமிழ் மன்றத் தலைவர் நீ.சஞ்சீவி, நூலகவியலறிஞர் ந.ஆவுடையப்பன் உள்பட பலர் பங்கேற்றனர்.

பரிசளிப்பு: வள்ளலார் பற்றிய கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை நடைபெற்ற கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற 9 பேருக்கு திருமுறை கலாநிதி தருமபுரம் வேலாயுத ஓதுவார் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற 8 பேருக்கு பின்னலூர் துரியானந்தர் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. இதுதவிர, பழ.சண்முகனார் நினைவு சிறப்புப்பரிசு 5 பேருக்கும், இரா.இராமசுவாமி-இராஜம்மாள் அறக்கட்டளை சிறப்புப் பரிசு 6 பேருக்கும் வழங்கப்பட்டது. இந்த பரிசுகளை நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன் வழங்கினார்.

இராமலிங்கர் இலக்கிய அறக்கட்டளை சார்பில், சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'நைன் டிவைன் சோல்ஸ்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் (இடமிருந்து) நூலகவியலறிஞர் ந.ஆவுடையப்பன், வழக்குரைஞர் வே.சொக்கலிங்கம், முனைவர் சு.பாலசுப்பிரமணியன், தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன், நூல் ஆசிரியர் பின்னலூர் மு.விவேகானந்தன், தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதி வெ.இராமசுப்பிரமணியன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன், விருதுபெற்ற வடலூர் ஞானசேகரன், டாக்டர் செ.சுமதி.

ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழிக் கல்வியை உறுதிப்படுத்த வேண்டும்

தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன்

சென்னை, பிப். 3: ஐந்தாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் தெரிவித்தார்.

இராமலிங்கர் இலக்கிய அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பின்னலூர் மு.விவேகானந்தனின் NINE DIVINE SOULS என்னும் நூலை நீதிபதி வெ. இராமசுப்பிரமணியன் வெளியிட முதல் பிரதியை தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் பேசியது:

குழந்தைகள் இன்று மருத்துவர், பொறியாளர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் படித்து வருகின்றனர். பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற இலக்கை நோக்கி சமுதாயம் நகர்ந்து கொண்டு இருக்கிறது. இதற்கு என்ன மாற்று, எப்படி ஈடுகட்டப் போகிறோம் என்ற கேள்விக்கு ஒருவிடை இருக்கிறது. அது அவர்கள் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், 5- ஆம் வகுப்பு வரை ஆரம்பக் கல்வி தாய்மொழியில் மட்டுமே கற்றுக்கொடுக்க வேண்டும் என்று உறுதிப்படுத்த வேண்டும்.

மொழிகளை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், எந்த குழந்தையாக இருந்தாலும், ஆரம்பக் கல்வியைத் தாய்மொழியில் கற்க வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும். ஆங்கில வழிக் கல்வியில் படிக்கும்போது குழந்தைகளுக்கு நர்சரி ரைம்ஸ் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆங்கில மொழி ஆளுமையை வளர்த்துக்கொள்ள கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால், ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பது இல்லை.

திருக்குறள், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற தமிழ் நூல்கள்தான் எப்படி நாம் இருக்க வேண்டும் என்ற ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்கின்றன. எனவே தாய்மொழிக்கல்விதான் குழந்தைகளுக்கு வழிகாட்ட சரியான தீர்வு.

இராமலிங்கர் இலக்கிய அறக்கட்டளை மாணவர்களுக்கு வள்ளலார் பற்றிய கட்டுரைப் போட்டிகளை நடத்தி பரிசுகளும் விருதுகளும் வழங்குவது பாராட்டத்தக்கது. இதுபோன்ற கட்டுரைப் போட்டிகளை தினமணி இணைந்து நடத்தத் தயாராக இருக்கிறது என்றார் தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன்.

விபத்துகள், உயிரிழப்புகளை குறைக்கும் மாவட்டங்களுக்கு விருது

சென்னை, பிப்.3: சாலை பாதுகாப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு முதல் விபத்துகளையும், உயிரிழப்புகளையும் குறைக்கும் முதல் மூன்று மாவட்டங்களுக்கும், ஒரு சிறந்த காவல்துறை ஆணையரகத்துக்கும் முதல்வர் விருது வழங்கப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.

விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் வகையில் வாகனம் ஓட்டும்போது செல்லிடப்பேசிகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்படும் சாலைப் பாதுகாப்பு வாரம் வரும் பிப்ரவரி 4-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை கடைப்பிடிக்கப்பட உள்ளது. இதனை முன்னிட்டு முதல்வர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட சாலைப் பாதுகாப்பு வார வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

சாலையில் பயணிக்கும்பயணிகளின்பாதுகாப்பினை உறுதிப்படுத்திட, ஒவ்வொரு ஆண்டும்சாலைபாதுகாப்புக்கென ரூ. 65 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வானொலி மூலம் விழிப்புணர்வு, பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் 2017-ஆம் ஆண்டை விட 2018-ஆம் ஆண்டு, சாலை விபத்துகள் 3 சதவிகிதம் குறைந்துள்ளன. அதோடு, சாலை விபத்துகளினால் ஏற்படும் இறப்புகள் 25 சதவிகிதம் குறைந்துள்ளது.

முதல்வர் விருது: சாலைப் பாதுகாப்புப் பணிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், இந்த ஆண்டு முதல், விபத்துகளையும், உயிரிழப்புகளையும் குறைக்க சிறப்பான நடவடிக்கை எடுக்கும் முதல் மூன்று மாவட்டங்களுக்கும், ஒரு சிறந்த காவல் துறை ஆணையரகத்துக்கும் முதல்வரின் விருது வழங்கப்பட உள்ளது.

செல்லிடப்பேசி வேண்டாம்: தமிழக அரசு, பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டாலும், சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்க பொதுமக்களும் மிதமான வேகத்துடன் வாகனங்களை இயக்கி, வாகனங்களில் பயணம் செய்வோர் தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட்களை அணிந்தும், வாகனங்களை ஓட்டும்போது செல்லிடப்பேசிகளை பயன்படுத்தாமலும் சாலை விதிகளை முழுமையாகக் கடைப்பிடிப்பது மிக அவசியம். அதன்மூலம், விபத்தில்லா தமிழகத்தை உருவாக்கிட வேண்டும் என முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

சின்னத்தம்பி யானையை கும்கியாக மாற்றும் முடிவைக் கைவிட வேண்டும்

கோவை இயற்கை பாதுகாப்பு சங்கம் வலியுறுத்தல்

கோவை, பிப். 3: சின்னத்தம்பி யானையை கும்கியாக மாற்றும் முடிவை கைவிட வேண்டும் என்று கோவை இயற்கைப் பாதுகாப்பு சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கோவை இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின்(என்.சி.எஸ்) சார்பில் யானைகள் பாதுகாப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் கிளஸ்டர் மீடியா கல்லூரி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, அமைப்பின் தலைவர் என்.ஐ.ஜலாலுதீன் தலைமை வகித்தார். கூட்டத்தில் வன விலங்கு ஆர்வலர்கள் அரவிந்த், திரு, விவாகீ, சாய் பிரசாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள யானைகளின் பாதுகாப்பு, வனத் துறையின் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், உடுமலை காடுகளில் சுற்றித் திரியும் சின்னத்தம்பி யானையைப் பிடித்து முதுமலை புலிகள் காப்பகத்தில் விட வேண்டும். முதுமலையை ஒட்டி பந்திப்பூர், வயநாடு வனவிலங்கு சரணாலயங்கள் இருப்பதால் அங்கு அதிக அளவில் யானைகள் உள்ளதால் சின்னத்தம்பி அச்சூழலுக்குப் பழகிவிடும். சின்னத்தம்பியை கும்கியாக மாற்றும் முயற்சிகளை கைவிட வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கோரிக்கை பரிசீலிக்கப்படும்: அமைச்சர்

சென்னையில் செய்தியாளர்களை ஞாயிற்றுக்கிழமை சந்தித்த அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் கூறியது: சின்னத்தம்பி யானையை கும்கியாக மாற்றினால் நல்லது என வனத் துறை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், அந்த யானையை கும்கியாக மாற்றக் கூடாது எனக் கோரிக்கை எழுந்திருப்பது குறித்து பரிசீலிக்கப்படும். தமிழகத்தில் உள்ள 101 யானை வழித் தடங்களிலும் ஆக்கிரமிப்புகள் உள்ளன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது என்றார்.

தமிழ்நாடு அரசு - காவல் துறை

ந.க. எண். டி1 (3)/175/132184/2019 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

[illegible] கடைசி நாள் **15.02.2019 - 14.00 மணி** வரை. [illegible] **15.02.2019 அன்று 16.00 மணிக்கு** [illegible]

செ.ம.தொ.இ/761/ஒப்பந்தப்புள்ளி/2019 — காவல் ஆணையாளர் - சென்னை பெருநகர காவல்

பாரத ரிசர்வ் வங்கி
RESERVE BANK OF INDIA
www.rbi.org.in

10 ஆண்டு மாநில அரசு (மறுவெளியீடு) பத்திரங்கள் ஏலம்

தமிழ்நாடு மாநில அரசு ₹1200.00 கோடி மொத்த மதிப்பு (முக மதிப்பு) உடைய பத்திரங்களை ஏல விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு கூடுதல் தொகையாக ₹300 கோடியைத் தக்க வைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது.

பன்முக விலை அமைப்பின் கீழ், பலன் அடிப்படையில் நடத்தப்படும் இந்த ஏலமானது, இந்திய ரிசர்வ் வங்கியின் முக்கிய வங்கி செயல்பாடுகளுக்கான மையப்படுத்தப்பட்ட கணினித் தீர்வு முறையில் (CBS) (E-Kuber) மூலம் பெப்ரவரி 05, 2019 (செவ்வாய்க் கிழமை) அன்று நடத்தப்படும். மேலும் விவரங்களுக்கு, பெப்ரவரி 01, 2019 தேதியிட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் பத்திரிகை வெளியீட்டை, www.rbi.org.in என்ற இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் பார்க்கவும்.

''பணம் அளிப்பதாக உங்களுக்கு வரும் மின்னஞ்சல்கள்/ குறுஞ்செய்திகள் அழைப்புகள் போன்றவற்றால் ஏமாறாதீர்கள்.''

S.P. APPARELS LIMITED
Registered Office : 39-A, Extension Street, Kaikattipudur, Avinashi - 641654, Tirupur District, Tamilnadu.
Tel : +91 4296-714000 Website : www.spapparels.com
Email :csoffice@s-p-apparels.com CIN : L18101TZ2005PLC012295

NOTICE

Pursuant to Regulation 47(1)(a) of the Securities and Exchange Board of India (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015, Notice is hereby given that a Meeting of Board of Directors of the Company is scheduled to be held on Wednesday, 13th February, 2019 at the Registered office: 39-A, Extension Street, Kaikattipudur, Avinashi - 641654, Tirupur District, Tamilnadu, to inter-alia consider, approve and take on record the unaudited Standalone & Consolidated Financial Results of the Company for the Quarter ended 31st December, 2018.

For S. P Apparels Limited
Sd/-
K. Vinodhini
Company Secretary and Compliance Officer

Place : Avinashi
Date : 04th February, 2019

தமிழ்நாடு அரசு
மாநில ஊரக சாலைகள் வளர்ச்சி முகமை
பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் -II (2018-19)
சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டும் பணிகள்
மறு ஒப்பந்தப்புள்ளி

1. முழுமையான விவரங்களுக்கு www.pmgsytenderstn.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் (திருவாரூர் மாவட்டம்) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்பாடு செய்யும் பணிகளுக்கும் சிப்பங்கள் வாரியாக மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.pmgsytenderstn.gov.in என்ற இணைய தள முகவரியில் இலவசமாக 05.02.2019 முதல் 20.02.2019 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்:
   (i) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 20.02.2019 மாலை 3.00 மணி வரை
   (ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 20.02.2019 மாலை 4.00 மணி முதல்

இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை
செ.மா.தொ.இ./747/ஒப்பந்தப்புள்ளி/2019

கல்வி, வேலை வாய்ப்பு செய்திகளுக்கு...
www.dinamani.com

தெற்கு ரயில்வே

பொருட்கள் மேலாண்மை துறை
அறிவிப்பு எண். 02/2019

ஃபெர்ரஸ் ஸ்க்ராப், ஃபெர்ரஸ் அல்லாதவை, பிற பல்வகை ஸ்க்ராப்கள், கழித்துக் கட்டப்பட்ட வேகன், பயணப்பெட்டிகள் & லோகோக்கள், ஸ்க்ராப் ரயில்கள் மற்றும் பிற நிரந்தர வழி ஸ்க்ராப் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக மின்னணு – ஏலம் நடத்தப்பட உள்ளது.

வ. எண்.	மின்னணு ஏலத்தை நடத்துபவர்	மார்ச் 2019 மாதத்திற்கான ஏலம் நடைபெறும் தேதி நிரல்			
1.	துணைத் தலைமை பொருட்கள் மேலாளர்/ GSD/பெரம்பூர்	04.03.2019	12.03.2019	21.03.2019	29.03.2019
2.	துணைத் தலைமை பொருட்கள் மேலாளர்/ CSSD/பொன்மலை	08.03.2019	18.03.2019	26.03.2019	—
3.	துணைத் தலைமை பொருட்கள் மேலாளர்/ SSD/போதனூர்	05.03.2019	—	28.03.2019	—
4.	முதுநிலைக் கோட்ட பொருட்கள் மேலாளர்/ MAS	07.03.2019	19.03.2019	27.03.2019	—
5.	முதுநிலைக் கோட்ட பொருட்கள் மேலாளர்/ திருவனந்தபுரம்	06.03.2019	14.03.2019	25.03.2019	—
6.	முதுநிலைக் கோட்ட பொருட்கள் மேலாளர்/ திருச்சிராப்பள்ளி	11.03.2019	20.03.2019	29.03.2019	—

ஏலத்துக்கான பொருட்கள் : மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள், www.ireps.gov.in தளத்தில் உள்ள ஏலப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

விரிவான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் ஏலப்பட்டியல் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் பார்வையிடுங்கள் எமது இணையதளம் http://www.ireps.gov.in→E-Auction→Sale→Live Auctions.

துணைத் தலைமை பொருட்கள் மேலாளர்/விற்பனை/பெரம்பூர்
முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர் அவர்களுக்காக

केनरा बैंक
கனரா பேங்க்
(ஓர் இந்திய அரசு நிறுவனம்)

பிடாதி கிளை
நெல்லிக்குடே டேங்க் ரோடு, பிடாதி-ஹூப்ளி, ராமநகர் மாவட்டம்-562-109, இ.மெயில்:cb0426@canarabank.com, தொ.பே: 080 27282439/2782223

சுவாதீன (POSSESSION) அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல்,நிதிச்சொத்துகளைச சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சட்டம் 54/2002) கீழே கையொப்பமிட்டுள்ளவர் கனரா வங்கியின் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தார் திருமதி உமாமகேஸ்வரி. M (உரிமை:M/s.K.V.S பாரத் என்டெர்பிரைசஸ் அவர்களுக்கு 30.10.2018 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை(DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் ரூ.5,22,34,298.00(ஐந்து கோடியே இருபத்திரண்டு லட்சத்து முப்பத்துநான்காயிரத்து இருநூற்றுதொண்ணூற்று எட்டு ரூபாய் மட்டும்) மற்றும் மாதாந்திர கூட்டுவட்டியாக ஆண்டுக்கு 13.00% விதத்தில் வட்டித்தொகையும்[அதாவது MCLR (8.70)+2.30+2(அபராத வட்டி)]- ரெகுலர் வரம்பான ரூ.400.00 லட்சத்திற்கு மற்றும் மாதாந்திர கூட்டுவட்டியாக ஆண்டுக்கு 15.00%விதத்தில் வட்டித்தொகையும்(அதாவது 13+2.00).ஆட் -ஹாக் வரம்பான ரூ.80.00லட்சத்திற்கும் மற்றும் 01.10.2018 முதல் இதர கட்டணங்களையும் சேர்த்துச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதி 8 & 9ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை 01 பிப்ரவரி 2019 தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில்(POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது, கனரா வங்கிக்கு செலுத்தவேண்டிய ரூ. 5,22,34,298.00 மற்றும் அதன் மீதான வட்டியும் சேர்த்து முழுவதுமாக செலுத்தவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

அசையா சொத்துகள் விவரம்

சொத்து எண் 1. தமிழ் நாடு, கோயம்புத்தூர் தெற்கு வட்டம், குறிச்சி கிராமம், குறிச்சி டவுன் பஞ்சாயத்து, பவானி மில்ஸ் பகுதி, பட்டா எண் 649, GSNo 191/3 (SFNo 191/3A1A-யில் உள்ள பட்டா எண் 3033-ல் உட்பிரிவுகள் படி). இதில் அடங்கியுள்ள 28 செண்ட் மற்றும் 414 சதுர அடி கொண்ட சொத்து மற்றும் அதில் உள்ள கட்டிடம் மற்றும் அதன் முக்கிய பகுதிகளும். இது திருமதி M உமாமகேஸ்வரி பெயரில் உள்ளது.நான்கு எல்லைகள்: வடக்கில்- நிலம் SFNo 190/2 பகுதி, தெற்கில்-30 அடி அகல கிழக்கு மேற்கான வண்டிப்பாதை, கிழக்கில்-நிலம் SFNo 599, மேற்கில்-நிலம் SFNo191/3 பகுதி-ரவிச்சந்திரன் அவர்களுக்குச் சொந்தமானது.

சொத்து எண் 2. தமிழ் நாடு, கோயம்புத்தூர் தெற்கு வட்டம், குறிச்சி கிராமம், குறிச்சி டவுன் பஞ்சாயத்து, பவானி மில்ஸ் பகுதி, பட்டா எண் 649, GSNo 191/3 (SFNo 191/3A1A-யில் உள்ள பட்டா எண் 3033-ல் உட்பிரிவுகள் படி). இதில் அடங்கியுள்ள 29 செண்ட் மற்றும் 253 சதுர அடி கொண்ட சொத்து மற்றும் அதில் உள்ள கட்டிடம் மற்றும் அதன் முக்கிய பகுதிகளும்.இது திருமதி M உமாமகேஸ்வரி பெயரில் உள்ளது.நான்கு எல்லைகள்:வடக்கில்- நிலம் SFNo 190/2 பகுதி, தெற்கில்-30 அடி அகல கிழக்கு மேற்கான வண்டிப்பாதை, கிழக்கில்-நிலம் SFNo 599, மேற்கில்-நிலம் SFNo191/3 பகுதி-பிரான்சிஸ் ரொசாரியோ அவர்களுக்குச் சொந்தமானது.

இடம்: பிடாதி
தேதி: 01.02.2019

அதிகாரபூர்வ அலுவலர்
கனரா பேங்க்

FORM G
INVITATION FOR EXPRESSION OF INTEREST
(Under Regulation 36A (1) of the Insolvency and Bankruptcy (Insolvency Resolution Process for Corporate Persons) Regulations, 2016

RELEVANT PARTICULARS

1	Name of the corporate debtor	Everwin Textile Mills Private Limited.
2	Date of incorporation of corporate debtor	25/11/1994
3	Authority under which corporate debtor is incorporated / registered	Registrar of Companies, Chennai
4	Corporate identity number / limited liability identification number of corporate debtor	U17111TZ1994PTC005535
5	Address of the registered office and principal office (if any) of corporate debtor	4/12, Chithappa Avenue, Royapuram Main Road, Tirupur- 641601, Tamil Nadu, India.
6	Insolvency commencement date of the corporate debtor	29/10/2018
7	Date of invitation of expression of interest	04.02.2019
8	Eligibility for resolution applicants under section 25(2)(h) of the Code is available at:	Can be obtained by sending email at equitablelegal@gmail.com.
9	Norms of ineligibility applicable under section 29A are available at:	Can be obtained by sending email at equitablelegal@gmail.com.
10	Last date for receipt of expression of interest	19.02.2019
11	Date of issue of provisional list of prospective resolution applicants	23.02.2019
12	Last date for submission of objections to provisional list	28.02.2019
13	Date of issue of final list of prospective resolution applicants	02.03.2019
14	Date of issue of information memorandum, evaluation matrix and request for resolution plans to prospective resolution applicants	23.02.2019
15	Manner of obtaining request for resolution plan, evaluation matrix, information memorandum and further information	1.It will be communicated to qualified and shortlisted Resolution Applicants 2. Contact J. Manivannan, Resolution Professional of Everwin Textile Mills Private Limited at equitablelegal@gmail.com.
16	Last date for submission of resolution plans	02.04.2019
17	Manner of submitting resolution plans to resolution professional	1. Through speed post / registered post or by hand delivery addressed to J. Manivannan, Resolution Professional for Everwin Textiles Private Limited, Plot No. 53B, 8/330, Vishalakshi Nagar, Fourth Cross Street, Santhosapuram, Chennai, Tamil Nadu, 600073. 2. A soft copy is required to be mailed to equitablelegal@gmail.com.
18	Estimated date for submission of resolution plan to the Adjudicating Authority for approval	15.04.2019
19	Name and registration number of the resolution professional	Manivannan. J IBBI/IPA-002/IP-N00534/2017-2018/11695
20	Name, Address and e-email of the resolution professional, as registered with the Board	Plot No. 53B, 8/330, Vishalakshi Nagar, Fourth Cross Street, Santhosapuram, Chennai, Tamil Nadu, 600073 - equitablelegal@gmail.com
21	Address and email to be used for correspondence with the resolution professional	Plot No. 53B, 8/330, Vishalakshi Nagar, Fourth Cross Street, Santhosapuram, Chennai, Tamil Nadu, 600073-equitablelegal@gmail.com
22	Further Details are available at or with	J. Manivannan Resolution Professional
23	Date of publication of Form G	04.02.2019

J. Manivannan
Resolution Professional
For Everwin Textile Mills Private Limited
IBBI/IPA-002/IP-N00534/2017-2018/11695
Plot No. 53B, 8/330, Vishalakshi Nagar, Fourth Cross Street, Santhosapuram, Chennai, Tamil Nadu, 600073.

Date: February 4, 2019
Place: Chennai